'பாரதி'யிலும் பார்க்க 'வசந்தமாளிகை' எவ்வளவோ திறம்.

நம்மவர்க்கான சினிமாவைத் தேடி தமிழ்நாடு சென்ற கதை தொடர்ந்து சொல்லியிருந்தேன். பாலுகேந்திரா, தங்கர்பச்சான் என்ற ஆளுமை மிகுந்த சினிமா நெறியாளர்கள் பற்றியும் 'அஞ்சாதே' என்ற கலைத்துவ திரைப்படம் பற்றியும் இதுவரை எழுதினேன்.

சென்ற ஒரு பேப்பரில் (100ஆவது இதழ்) சீனாவுக்கு என் வாழ்த்தும் வைதலும் என்று சீனாவில் நிகழ்ந்த ஒலிம்பிக் தொடர்பாக எழுதினேன். என்றாலும் மீண்டும் நம்மவர்களுக்கான 'சினிமாவைத் தேடியே' தொடர்கின்றேன்.

மீணடும் ஒருமுறை ஒப்புக் கொள்கின்றேன், நம்மவர்க்கான சினிமா எப்படி அமையவேண்டும் என்று எந்தவொரு ஆலோசனையும் அபிப்பிராயமும் இப்பத்தியில வராது. நம்மவர்க்கான சினிமா தொடர்பாக தமிழகம் சென்றதில் கிடைத்த அனுபங்களே இதில பதியப்படுகின்றன. அதனுடன் சேர்த்து என் அபிப்பிராங்களும் இதில் குறிப்பிடப்படும்.

ஒருநாள் மாலை ஐந்து மணியளவில் வடபழனி பார்க் ஹொட்டேல் என்ற தங்ககத்தில் செழியன் அவர்களைச் சந்தித்தோம். இப்பொழுது எங்களுடன் த.அகிலனும் இணைந்து கொண்டார்.

அகிலன் பற்றிய சிறு குறிப்பொன்று. ***ஒரு பேப்பர்*** ரில் "போனதெல்லாம் கனவினைப் போல்" எனும் பத்தியை எழுதி வருபவர். ஒரு ரேடியோவில் 'குலோத்துங்கன்' என்ற பெயரில் சில நிகழ்ச்சிகளை தயாரித்திருந்தார்.

சினிமா நெறியாளர் அமீர் (பருத்தி வீரன்), இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், நடிகர் சிறீகாந்த் இவர்களுடனான அகிலனின் செவ்வி குறிப்பிடத் தக்கது.

கிளிநொச்சியில் என்னிடம் தமிழ் பயின்ற கமலினி என்ற பிள்ளையின் தம்பி. 2005ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் அகிலனை ஒரு கறுத்த சிறுவனாகக் கண்டேன். இப்பொழுது யாவற்றிலும் வளர்ந்து என்னை வியப்பூட்டுகின்றார்.

செழியனையும் யார் என்று சொல்ல வேண்டும். பாலாஜி சக்திவேல் இயக்கிய 'கல்லூரி' திரைப்படத்தின் ஒளிப்பதிவாளர். செழியனிடம் நான் மெச்சி உணர்ந்தது இதனைத்தான். ஆனந்த விகடன் வார இதழில் இரண்டு வருடங்கள் (அதற்கு மேலேயோவும் தெரியாது) தொடர்ச்சியாக 'உலக சினிமாக்கள்' பற்றி எழுதி வந்தார். உலகத்தில் வெளியான மிகச் சிறந்த திரைப்படங்களில் 100பற்றியாவது இத்தொடர் தொட்டிருக்கும்.

செழியன் ஒன்றில் மிகக் கவனம் பதித்திருக்கிறார். திரைப்படம் பார்க்காதவர்களுக்கு அத்திரைப்படம் பற்றிய தகவல்களைச் சொல்கிறார். சொல்கையில் அதைக் காட்சிப்படுத்திய விதம் அபாரம். (உதாரணம் தர ஒரு பந்தி கூட தற்போது என்னிடம் இல்லை) அவரது எழுத்தில் நான் சிலிர்த்த அனுபவம் இதுதான்.

ஒரு திரைப்படத்தை எடுக்கிறார், அதன் கதைச் சுருக்கத்தைத் தருகிறார், அத்திரைப்படம் பற்றிய தகவல்களை எழுதுகிறார், இறுதியாக ஒரு பந்தி எழுதி முடிக்கிறார்.

அப்பந்தி மிகத் தேர்ந்த எழுத்தாளனையும் மிஞ்சும் வகையில் எழுதப்பட்டிருக்கும். அந்த எழுத்திற்கு நான் அடிமை. செழியன் பொதுவில் கலைப்படைப்புத் தொடர்பாகவே கதைத்துக் கொண்டிருந்தார்.

பொதுவில் சினிமா என்பதே ஒரு கலை. அதில் கலைப்படம், வணிகப்படம் என்று வகைப்படுத்துவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. தரமானபடம் தரமற்ற படம் அவ்வளவுதான் நான் சொல்வேன்.

ஞானராஜசேகரன் அவர்கள் இயக்கிய திரைப்படங்களைப் பார்த்தால் இவ்வாறு வகைப்படுத்துவது எவ்வளவு அபத்தம் என்பது புரியும். ஞானராஜகேசரன் இயக்கிய திரைப்படங்கள் இவை. 'மோகமுள்', 'முகம்', 'பாரதி', 'பெரியார்' இவற்றில் எதுவும் சினிமா மொழியில் எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இவற்றைக் கலைப்படம் என்கிறார்கள்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

பாரதி திரைப்படத்தில் 'நிற்பதுவே நடப்பதுவே' பாடல் காட்சி ஒன்றே இவ்வளவு திரப்படங்களிலும் நான் இரசித்தது. இவ்வளவுதிரைப்படங்களிலும் தங்கர்பச்சான் ஒளிப்பதிவை இரசித்தாலும் 'பெரியார்' திரைப்படம் என க்கு ஒரு நாடகம் போலவே படுகின்றது.

ஞானராஜசேகரனில் ஒரு புறத்தில் எனக்குக் கோபமும் உண்டு. பாரதியாரையும் பெரியாரையும் எவ்வளவுக்கு ஏலுமோ அவ்வளவுக்கு கொச்சைப் படுத்தியுள்ளார்.

ஒன்றுசொன்னால் என்னை அடிக்க வரமாட்டீர்கள்தானே. ஞானராஜசேகரன் எடுத்த எந்தத் திரைப்படங்களிலும் பார்க்க சிவாஜி நடித்த வசந்த மாளிகை திரைப்படம் எவ்வளவோ திறம்.

வசந்தமாளிகை திரைப்படத்தை ஏன் உதராணத்துக்கு எடுத்தேன் என்றால் அது வணிக ரீதியாக பெரு வெற்றி பெற்ற திரைப்படம். வணிகமே அதன் நோக்கம். என்றாலும் அது தான் எடுத்துக் கொண்ட நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

திரைப்படப்பிரதி வெகு தெளிவு. பாத்திர உருவாக்கம் கனகச்சிதம், பிசிறில்லை. வசந்த மாளிகையை நல்ல படமென்று நாக் கூசாமல் நான் சொல்வேன்.

ஆனால் நாம் கேட்டும், அறிந்தும், உணர்ந்ததுமான பாரதியாரையும் பெரியாரையும் அத் திரைப்படங்களில் பார்த்தோமா? ரிச்சாட் அட்டன்பரோவின் காந்தியை நாம் தரிசித்தோமே. அன்டனி குவீன் நடித்த 'ஒமார் முக்தா'வை நாம் உணர்ந்தோமே. அவ்வளவு செலவழித்து படம் ஆக்க முடியுமா? என்ற பலர் கேட்கக்கூடும்.

காந்திக்கு உண்டான செலவு மாத்திரம்தானா நம்மை காந்தியை தரிசிக்க வைத்தது? இல்லையே! ரிச்சாட் அட்டன்பரோ என்ற நெறியாளர் தன் உணர்வில் தோய்ந்து காந்தியைப் படைத்தார். பென் கிங்ஸ்லி என்ற நடிகர் காந்தியாய் வாழ்ந்தார். அவைதானே காந்தியை வாழ வைத்தது.

இவை எதுவும் இல்லாததால்தானே பாரதியும் பெரியாரும் அவமாய்ச் செத்தார்கள். இவற்றினிடையே கலைப்படம் வணிகப்படம் என்று எவ்வாறு பாகுபடுத்தலாம். இவை பற்றி உரையாட எனக்கு நிறைய விருப்பம் உண்டு. அடுத்த ஒரு பேப்பரில் அலசுவோமா!

உடல் உருவாகும் மூன்று மூலங்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

எமது உடலின் செயற்பாடு பற்றிக் காலத்திற்கு காலம் புதிய புதிய தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இத்துறையில் நாம் எதுவரை அறிந்து விட்டோம் என்பதைக்கூட நாம் உறுதியுடன் சொல்லும் நிலையில் இல்லை. ஆனால் எம் உடலுள் எத்தனை வகையான மூலகங்கள் உண்டென்று பிரித்துக் கூறுவது இன்றைய நிலையில் எளிதான விடயம். அறிவியல் அந்த அளவிற்கு வளர்ந்து விட்டது என்று நாம் பெருமைப் படலாம்.

எமது உடல் எதனால் ஆனது என்று கேட்டால் நாம் தயங்காது கரி, நீர்வளி, உயிர்வளி என்று சொல்லலாம். இதை ஆங்கிலத்தில் சிஎச்ஒ என்று எளிதாகச் சொல்வார்கள். அதாவது கார்பன் ஐதரசன் ஒக்சிஜின் ஆகிய மூன்று மூலகங்களையே இக்குறியீட்டால் காட்டுகிறார்கள். இந்த மூன்றும், உடலின் மூலக எண்ணிக்கையில் 98 சதவீதமாகும். அப்போ மிகுதி 2 சதவீதம் மற்றைய எல்லா மூலகங்களும் என்று எண்ணி விடாதீர்கள். அந்த 2 சதவீதத்தில் முக்கால் பகுதிக்குள் நைதரசன் புகுந்து விட்டது. 99.4 சதவீதம் இந்த நாலு மூலகங்களுக்கும் போக மிகுதி தசம் ஆறு சதவீதம்தான், அதாவது ஆயிரத்தில் ஆறு பங்குதான் மற்றைய எல்லா மூலகங்களும் வகிக்கின்றன.

எடையை அடிப்படையாகச் சொல்லும் சதவீதத்திற்கும் எண்ணிக்கையை அடிப்படையாகச் சொல்லும் சதவீதத்திற்கும் உள்ள வேறுபாட்டை சற்று அவதானியுங்கள். ஒரு கார்பன் அணு ஒரு நீர்வளி அணுவைப்போல் 12 மடங்கு எடை கொண்டது. 12,000 நீர்வளி அணுக்களின் எடையை ஆயிரம் கார்பன் அணுக்கள் எடையில் சமன் செய்துவிடும். ஆகையால் எடையில் சொல்லும்போது பிரதிபலிக்கும் சதவீதம் வேறு, எண்ணிக்கையில் சொல்லும்போது பிரதிபலிக்கும் சதவீதம் வேறு. எண்ணிக்கையில் 98 சதவீதம் இந்த மூன்று மூலகங்கள் என்று சொல்லும்போது அதன் அர்த்தம் 100 அணுக்களில் 98 அணுக்குள் இந்த மூன்று மூலகங்களாக இருக்கும் என்று கொள்ள வேண்டும். எடையைக் கவனத்திற்கு எடுத்தால் விடை வேறாக அமையும்.

மற்றைய எல்லா மூலகங்களும் ஆயிரத்தில் ஆறு பங்குதான். ஆனால் அவை வகிக்கும் பங்கு அளப்பரியது. ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லாத இரும்புச் சத்து இல்லாவிடில் உடல் எவ்வளவோ பாதிப்புக்கு உள்ளாகிறது. ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லாத அயடீன் உடல் வளர்ச்சியின் முக்கிய காரணியாகிறது. நாங்கள் நாளாந்தம் உண்ணும் உப்பிலுள்ள சோடியமும் குளோரினும் எமது குருதி ஒட்டத்திற்கு இன்றியமையாத மூலகங்களாகின்றன. கல்சியம் இல்லாத எலும்பைக் கற்பனை செய்து பார்க்க முடியாது. இங்கு கூறப்படுவது எல்லாம் உடல் என்னும் கூட்டமைப்பினுள் அடங்கிய மூலகங்களின் அளவு பற்றிய தகவல் மட்டுமே. ஆனால் நாளாந்தம் உடற் செயற்பாட்டுக்கு உணவுடன் சேர்க்க வேண்டிய முக்கிய தகவல்பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறப்படவில்லை. அது மருத்துவர்கள் கையாளவேண்டிய பகுதி.

கீழுள்ள அட்டவணை இரண்டையும் ஒருமுறை பாருங்கள். உடலினுள் உள்ள 6 மூலகங்களின் அளவு எண்ணிக்கையிலும் எடையிலும் தரப்பட்டுள்ளது.

எண்ணிக்கை 10,000மூலக அணுக்களில்	நீர் வளி 6300	உயிர் வளி 2550	கரி 950	நைதரசன் 140	கல்சியம் 31	பொஸ்பரஸ் 22	மொத்தம் 9993
அதுவே 10,000 கிராம் எடையில்	1,000	6143	2286	257	143	111	9939

இவை ஆறும் சேர்ந்து, முறையே எண்ணிக்கையில் 99.93 சதவீதமும் எடையில் 99.39 சதவீதமும் அடங்குகின்றன. மிகுதியாக உள்ள சொற்ப அளவுக்குள் 53 மூலகங்கள் அடங்குகின்றன. அவற்றுள் முக்கிய மூலகங்களான அயடீனும் இரும்பும்கூட அடங்குகின்றன. எமது உடலைப் பொறுத்த மட்டில் ஆயிரத்தில் ஒரு பகுதி என்றால் அது பெரிய பகுதி. காரணம் எமது உடலின் ஆயிரத்தில் ஒரு பகுதிக்குள் ஆறாயிரம் கோடி உயிரணுக்கள் அல்லது உயிர்க் கலங்கள் அடங்குகின்றன.

மோட்கேஜ் தொகையைச் செலுத்துவது கடினமா? கடன் அட்டை, கார் கடன் போன்ற பிரச்சனைகளா? உடன் எம்மை நாடுங்கள்.

வீட்டு உரிமையாளர்களே உங்கள் கவனத்திற்கு...

வாடகை வீட்டுக்கு எம் வாடிக்கையாளர்கள் காத்திருக்கிறார்கள்

உடன் எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

Call **Pon Siva**
Tel: **020 8683 1313**
Mob: **07958 953 199**
Fax: **020 8684 0444**

Mortgages
Re-mortgages
Business Loans for Shops
Petrol Station & Hotels

Portland Estate Agents UK Ltd
9 St. James Road
Croydon, Surrey, CR0 2SB.